**கல்வியாளர்களின் கவனத்திற்கு**

கோவிட்-19 தொற்றுநோய் பரவலைத் தடுப்பதற்காக அமல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு காலத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்திக்கொள்ளும் முகமாக மைய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகம் "பாரத இணையவழிக் கல்வி" என்ற இயக்கத்தைத் தொடங்கியுள்ளது. தேசத்தின் மின்-மூலவளங்களை ஒருங்கிணைக்கவும் மின்-வழி நிகழ்நிலைக் கல்வி அமைப்பை [ Online Education System ] மேம்படுத்தவும் பரிந்துரைகளை வழங்குவதற்காக பல்கலைக்கழக மானியக்குழு வல்லுநர் குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழுவின் செயல்பாடுகளை வகுப்பதற்கான உத்திகளையும் ஆலோசனைகளையும் ஆசிரியர்களிடமிருந்தும் மாணவர்களிடமிருந்தும் இக்குழு வரவேற்கிறது. கருத்துக்களை 16.04.2020க்குள் bharatpadheonline.mhrd@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு பல்கலைக்கழக மானியக்குழு 11.04.2020 நாளிட்டக் கடிதத்தின் வழி கோரியுள்ளது. ஆசிரியர்கள் தங்களது கருத்துக்களை மேற்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புமாறும் துறைத்தலைவர்கள் இத்தகவலை மாணவர்களுக்குத் தெரிவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கனிவுடன் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

- துணைவேந்தர்